**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**
**CC.No. 74/2025**
**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **: பாண்டியம்மாள்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : ------- | கணவர் பெயர் | : ரவி |
| கிராமம் | : கானல்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 52/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.07.2026 |

**( எதிரிகள் A1, A2 ஆஜரில் உள்ளனர் )**

**<u>முதல் விசாரணை :</u>**

கடந்த 2025 வருடம் மார்ச் மாதம் போல் பாண்டியராஜன் என்பவருக்கும் , ரவிக்கும் மிளகு எடுப்பது சம்பந்தமாக பிரச்சனை வந்தது . அப்போது நான் பட்டிவீரன்பட்டியில் உள்ள எனது மகன் தமிழரசன் வீட்டிற்கு சென்றிருந்தேன் . அப்போது எங்கள் ஊரைச் சேர்ந்த ராமலட்சுமி, வள்ளி ஆகியோர்கள் , ஆஜர் எதிரிகளான விஜயராமன் , ஆனந்தி ஆகிய இருவரும் எங்கள் வீட்டை உடைத்து விட்டதாக கைப்பேசி மூலம் தகவல் தெரிவித்தார்கள் . நான் வந்து எனது வீட்டை பார்த்துவிட்டு நான் தாண்டிக்கு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்துதான் . அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் . அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகள் என் வீட்டை உடைத்தாகச் சொல்லியுள்ள நிலையில் எதிரிகள் என் வீட்டை உடைத்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான் . கைப்பேசி வாயிலாக சம்பவம் பற்றி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான் . எனது கணவர் ரவி , ஆஜர் 1ம் எதிரியின் கணவர் பாண்டிராஜனை தாக்கியதாகச் சொல்லி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது கணவர் மீது பதியப்பட்ட வழக்கும் இந்த வழக்கு சம்பவ தேதியன்று நடைபெற்றது என்றால் சரிதான் . புகாரை

காவல்நிலையத்தில் எழுதினார்கள் . எனது மகன் பால்பாண்டி காவல்துறையில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான் . சம்பவத்திற்கு மறுநாள் நான் எனது வீட்டை பார்த்தேன் என்றால் சரிதான் . நான் எனது வீட்டை பார்த்தபோது நல்ல நிலமையில் இருந்தது என்றால் சரிதான் , ஆனார் சிறுசிறு சேதாரங்கள் ஏற்பட்டிருந்தது . எதிரிகள் தான் அந்த சேதாரங்களை ஏற்படுத்தினார்கள் என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான் . எதிரிகள் என் வீட்டிற்கு வரவில்லை என்றாலும் , எந்தவிதமான சேதாரமும் ஏற்படுத்தவில்லை என்றாலும் , எனது கணவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட காரணத்தால் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் எனது மகனின் செல்வாக்கை கொண்டு இந்த வழக்கானது எதிரிகள் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . என் வீட்டில் நான் சொன்னதுபோல் சேதம் ஏற்பட்டிருந்தால் புகாரில் சேதம் குறித்த மதிப்பு விபரத்தை குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் , அவ்வாறு நான் குறிப்பிடாததில் இருந்தே இந்த வழக்கு பொய் புகார் என புலனாகிறது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த ஒரு தொடர்பு இல்லை என்றால் சரியல்ல . எதிரிகளை பழிவாங்க வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.20 18:31:46 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No. 74/2025**

**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **: ராமலட்சுமி** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : –––––– | கணவர் பெயர் | : சக்தி முருகன் |
| கிராமம் | : கானல்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 48/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.07.2026 |

**( எதிரிகள் A1, A2 ஆஜரில் உள்ளனர் )**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கானல்காட்டில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது . ஆ.சா.1 பாண்டியம்மாள் எனது உறவினர் ஆவார் . கடந்த 25.03.2025 ம் தேதி பாண்டியம்மாள் வீட்டில் இருந்து மாலை சுமார் 05.00 மணியளவில் பண்டபாத்திரங்கள் உருட்டும் சத்தம் கேட்டது . இதுதொடர்பாக நான், பாண்டியம்மாளுக்கு கைப்பேசி மூலம் தகவல் சொன்னேன் . வழக்கு குறித்த விபரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது.

**<u>அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

கடந்த 27.03.2025 ம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த ராமசந்திரன் மனைவி வள்ளி வீட்டின் முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தபோது பாண்டியராஜன் வீட்டில் இருந்து சத்தம் கேட்டு நாங்கள் அங்கு சென்று பார்த்தபோது ஆஜர் எதிரிகள் ஆனந்தி , விஜயராமன் ஆகியோர் கடப்பாறை மற்றும் அரிவாளுடன் பாண்டியம்மாள் வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்தார்கள் என்றாலும் , எதிரி விஜயராமன் என் அப்பாவை அடிக்கிறீர்களா என்று சத்தம் போட்டு, எதிரிகள் ஆனந்தி மற்றும் விஜயராமன் ஆகிய இருவரும் கையில் வைத்திருந்த ஆயுதத்தைக்கொண்டு பாண்டியம்மாள் வீட்டில் கதவு , ஜன்னல், பூஜை ரூம் கஃபோடு , கண்ணாடி ஆகியவற்றை உடைத்து சேதப்படுத்தினார்கள் என்றாலும், பிறகு வீட்டிற்கு வெளியே வந்து பாண்டியம்மாள் குடும்பத்தை தரக்குறைவாக பேசினார்கள் என்றாலும், மேலும் யார் வந்தாலும் வெட்டுவோம் என்று சொல்லிவிட்டு சென்றதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல. எதிரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் எதிரிகளுக்கு ஆதரவாக , வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.20 18:31:52 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**
**CC.No. 74/2025**
**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **வள்ளி** | தொழில் | : காட்டு வேலை |
| தகப்பனார் பெயர் | : ------ | கணவர் பெயர் | : ராமச்சந்திரன் |
| கிராமம் | : கானல்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 40/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.07.2026 |

**( எதிரிகள் A1, A2 ஆஜரில் உள்ளனர் )**

**முதல் விசாரணை :**

நான் கானல்காட்டில் வசித்து காட்டு வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும் . ஆ.சா.1 பாண்டியம்மாளைத் தெரியும் . தேதி நினைவில்லை . சென்ற வருடம் மாலை சுமார் 06.30 மணியளவில் எங்கள் வீட்டின் அருகே கண்ணாடி நொருங்கும் சத்தம் கேட்டது . நான் மட்டும் சென்று பாண்டியம்மாளின் வீட்டை பார்த்தபோது பொருட்கள் உடைந்திருந்தது. அதுகுறித்து பாண்டியம்மாளுக்கு நான் கைப்பேசி வாயிலாக தகவல் தெரிவித்தேன்.

**அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

கடந்த 27.03.2025 ம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த சக்திமுருகன் மனைவி ராமலட்சுமியுடன் என் வீட்டின் முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தபோது பாண்டியராஜன் வீட்டில் இருந்து சத்தம் கேட்டு நாங்கள் அங்கு சென்று பார்த்தபோது ஆஜர் எதிரிகள் ஆனந்தி, விஜயராமன் ஆகியோர் கடப்பாறை மற்றும் அரிவாளுடன் பாண்டியம்மாள் வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்தார்கள் என்றாலும், எதிரி விஜயராமன் என் அப்பாவை அடிக்கிறீர்களா என்று சத்தம் போட்டு , எதிரிகள் ஆனந்தி மற்றும் விஜயராமன் ஆகிய இருவரும் கையில் வைத்திருந்த ஆயுதத்தைக்கொண்டு பாண்டியம்மாள் வீட்டில் கதவு, ஜன்னல், பூஜை ரூம் கஃபோடு, கண்ணாடி ஆகியவற்றை உடைத்து சேதப்படுத்தினார்கள் என்றாலும் , பிறகு வீட்டிற்கு வெளியே வந்து பாண்டியம்மாள் குடும்பத்தை தரக்குறைவாக பேசினார்கள் என்றாலும், மேலும் யார் வந்தாலும் வெட்டுவோம் என்று சொல்லிவிட்டு சென்றதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல . எதிரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் எதிரிகளுக்கு ஆதரவாக , வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.20 18:31:57 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.